**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 52/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 3 |
| Name | : திரு. அபிமன்யூ |
| Father/Husband's Name | : முத்துராமன் |
| Village | : ராஜம் நகர் முதல் தெரு, கோவலன் நகர், |
| Taluk | : மதுரை |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.05.2025.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது கோவலன் நகர், மதுரையில் வசித்து வருகிறேன். கடந்த 2022 ம் ஆண்டு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து மதுரை தெற்கு வாசல் காவல் நிலையத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் திருட்டு வீடியோ தடுப்பு குற்றப்பிரிவு பரங்கிமலையில் தலைமை காவலராக பணிபுரிந்த போது 29.09.2006 அன்று பகல் 12.30 மணியளவில் இந்தியன் மியூசிக்கல் இண்டஸ்ட்ரீஸ் துப்பறிவாளராக பணிபுரியும் திரு.இராமானுஜம் என்பவர் புகார் ஒன்றை காவல் நிலையத்தில் அளித்தார். அப்புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.82/2006 பிரிவுகள் 51 r/w 63, 52A, 68A Copy Right Act யின்படி வழக்கு பதிவு செய்து சம்பவயிடத்திற்கு போலிஸ் பார்ட்டியுடன் சென்று திருவாதூர், பவுஞ்சூர் பஜாரில் உள்ள இராஜா எலக்ட்ரிகல்ஸ் கடையில் உள்ள இன்னாரென்று கூறி தங்களது கடையில் திருட்டு சிடிக்கள் விற்பதாக தகவல் வந்தது என்றும், அதனால் உங்களுடைய கடையை சோதனை செய்ய கேட்டு கொண்டதன்

பேரில் 14.15 மணி முதல் 14.45 மணிவரை தணிக்கை செய்த போது திருட்டு சிடிக்கள், டிஸ்க், தமிழ் படங்கள் அடிமை பெண், கௌரவம், உரிமை குரல், வடிவேல் காமெடிகள், எம்பி 3 தமிழ் பாடல்கள், ஆங்கில பட டிவிடிக்கள், மொத்தம் 310 சிடிக்கள் சோதனை சபிதாவில் கைப்பற்றப்பட்டது. சாட்சியிடம் இவ்வழக்கு சொத்து காண்பிக்கப்பட்டது. சாட்சி அவை தான் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்து என கூறுனார். **<u>அது சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** மேலும் சோதனை சபிதா காண்பிக்கப்பட்ட போது அதில் உள்ள 2வது கையொப்பம் தன்னுடையது என்று கூறுகிறார். **<u>அந்த கையொப்பம் அதசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>**

பின்னர் 14.45 மணியளவில் எதிரி ராஜா என்பவரை கைது செய்து எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், தலைமை காவலர் மகேந்திரன் என்பவரும் கையொப்பம் செய்தோம். சாட்சியிடம் ஒப்புதல் வாக்குமூலம் காண்பிக்கப்பட்ட போது அதிலுள்ள 2வது கையொப்பம் தன்னுடையது என்று கூறுகிறார். **<u>அந்த ஒப்புதல் வாக்கமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் அதசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** ஆஜர் எதிரி தான் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த நபர்.

பின்னர் எதிரியையும், வழக்கு சொத்தையும் காவல் நிலையத்தில் பாரா வசம் ஒப்படைத்தோம். வழக்கின் விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்திற்கும் சம்பவயிடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 50 கி.மீ. இருக்கும். சம்பவயிடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்று கேட்டால் 14.15 மணிக்கு. என்னுடன் யார் யார் வந்தார்கள் என்று கேட்டால் ராமானுஜம், ஆய்வாளர் பாரதி, தலைமை காவலர் மகேந்திரன் ஆகியோர்கள் சென்றோம். இராமானுஜம் துப்பறிவாளர் என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் எதாவது கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. சம்பவயிடம் மக்கள் அதிக நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். சோதனை செய்யும் போது வீடியோ அல்லது போட்டோ எதாவது எடுத்தோமா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலம் யார் பதிவு செய்தார் என்றால் ரைட்டர் ஜோதிபாஸ்கர் சம்பவயிடத்தில் வைத்து எடுத்தார். ஒப்புதல் வாக்குமூலம், புகார், தணிக்கை நமுனா ஆகியவை ஒரே நபரால் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

இந்த புகாரே புகார்தாரர் கொடுக்கவில்லையென்று சொன்னால் சரியல்ல. இந்த

வழக்கில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யப்பட்டதா என்றால் தயார் செய்யப்பட்டது அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன். பார்வை மகசர், வரைபடம் தயார் செய்யப்பட்டதா என்றால் பார்வை மகசர் தயார் செய்தார்கள் வரைபடம் எதாவது தயார் செய்தார்களா என்பது தெரியாது. எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லையென்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கே புள்ளி விவரத்திற்காக போடப்பட்ட வழக்கு என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு சொத்து, ஆவணங்கள் எதையும் சம்பவயிடத்தில் தயார் செய்யப்படவில்லை என்று சொன்னாலும், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

இவ்வழக்கில் தனி நபர் சாட்சிகள் யாரையாவது விசாரணை செய்தார்களா என்றால் பொது மக்கள் யாரும் வரவில்லை. சம்பவயிடத்தை சுற்றி என்னென்ன கடைகள் இருந்தது என்றால் தெரியாது. எதிரியை நான் பார்த்ததே இல்லை என்றாலும் தற்போது எதிரி தனியாக நிற்பதால் அடையாளம் காட்டுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லையென்று சொன்னாலும், எதிரி அவ்வாறான கடை நடத்தவில்லையென்று சொன்னாலும் சரியல்ல. இவ்வழக்கு புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.